ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/16 - 2021 අගෝස්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2021.08.03

*2239/16 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

3இ பிரிவின் கீழான அறிவித்தல்

*திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3இ பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், மேற்படி சட்டத்தின் 3இ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2021, ஏப்பிறல் 05 ஆந் திகதிய 2222/ 2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டவாறான 2016, நவெம்பர் 10 ஆந் திகதிய 1992/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையின் 9 ஆம் பந்திக்கு உடனடுத்து வருமாறு பின்வரும் புதிய பந்தியை இணைப்பதன் மூலம் திருத்தியமைப்பதாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*"(10) திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்குட்பட்டு, தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் பேரில், அத்தியாவசிய வெளிக்கள செயற்பாடுகளுக்காக ஐம்பத்தியிரண்டு (52) நீர் பவுசர்களையும் அறுபத்தியிரண்டு (62) இரட்டை கெப் வண்டிகளையும் இறக்குமதி செய்வதற்கான 2021, யூன் 11 ஆந் திகதிய 21/ 1140/ 304/ 094 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக 2021, யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கிணங்க இறக்குமதி செய்யப்பட்ட, இ. மு. குறியீடு 8704.23.71 இன்கீழ் வகைப்படுத்தப்பட்ட நீர் பவுசர் அல்லது இ. மு. குறியீடு 8704.21.91 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இரட்டை கப் வண்டி."*

***பசில் ராஜபக்ஷ,***
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, ஓகத்து 03.*

*08-248*